# ரெ. முத்துக்கணேசனாரின் கவிதைகளில் பண்பாட்டுப் பதிவுகள்

*த. தீபா*
முனைவர் பட்ட ஆய்வாளர், (பகுதி நேரம்)
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை

*முனைவர் மு. பழனியப்பன்*
தமிழ்த்துறைத் தலைவர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை
DOI: https://doi.org/10.5281/zenodo.13783743

*கவிதை இலக்கியங்கள் மென்மையாக ஆனால் அதே நேரத்தில் ஆழமாகப் பண்பாட்டுப் பதிவுகளைப் பதிவனவாகும். தமிழின் பண்பாடு என்பது நீண்ட வரலாறு உடையது. அப்பண்பாட்டினைக் காப்பதாகவும், வலியுறுத்துவதாகவும், வழி மொழிவதாகவும் இலக்கியங்கள் திகழ்கின்றன. குறிப்பாகச் சிறு சிறு கவிதைப் பதிவுகள் கூட ஆழமான பண்பாட்டுச் சிந்தனைகள் பெற்றனவாக விளங்குகின்றன.*

*வாழ்க்கையில் மனிதன் முழு நிறைவை அடைவதற்காக மேற்கொள்ளும் முயற்சியின் பயனாக அமைவது பண்பாடு. முழு நிறைவான வாழ்க்கை இனிமையும், ஒளியும் உடையதாக அமையும் என்கிறார் மேத்யு அர்னால்டு. பண்பாடு வாழ்வில் நிறைவைத் தேடும் பணியாகவும், நிறைவைத் தேடியவர்களின் பண்பாட்டினைப் பின்பற்றுவதும் ஆகும். எனவே பண்பாடு என்பது ஒரு வாழ்வியல் தொடர்ச்சி என்பதை உணரமுடிகின்றது.*

*சுபண்பாட்டின் வளர்ச்சியில் பல படிநிலைகள் உள்ளன. தனி மனிதனுடைய உணர்வுகளும், செயல்களும், பழக்க வழக்கங்களும் வளர்ச்சியுறுதல் ஒருநிலை. தனி மனிதர்கள் ஒன்றாகக் கூடி வாழ்வதால் உருவாகும் சமுகங்களின் பண்பட்ட முன்னேற்றம் மற்றொரு நிலை. சமுகங்கள் பல சேர்ந்து ஒரு சமுதாயமாகப் பின்னிப்பிணைந்து இயங்கும்பொழுது உருவாகும் வாழ்க்கை நெறி, பழக்க வழக்கங்கள், கலையுணர்வு, சிந்தனை முதிர்ச்சி ஆகிய அனைத்தும் இணைந்து ஒருவகைச் சமுதாயச் சிந்தனையாக வெளிப்படுவதே பண்பாடு என்ற மூன்றாவது நிலை என்று பண்பாட்டை வகைப்படுத்துகிறார் எலியட்.*

*பண்பாடு என்பது தனிமனிதப் பண்பாடு, குழுப் பண்பாடு, பல குழுக்கள் இணைந்த பண்பாடு என்ற நிலையில் மூவகைப் படுத்தப்படுகிறது. ஒன்றில் இருந்து ஒன்றாக இவை கொடுக்கல் வாங்கல் தன்மையில் இவை அமைவனவாகும். ஒன்றில் இருந்து ஒன்று வளர்ச்சி பெறும் நிலைப்பாடும் உடையதாகும். இவ்வகையில் பண்பாடு என்பது ஒருநிலத்தில் வாழும் மனிதக்குழுவின் நடத்தைகள் என்பதாகக் கொள்ளலாம்.*

*இப்பண்பாட்டை வரையறுப்பவர்கள் என்று எவரும் கிடையாது. அது தானாக வரையறுத்துக்கொள்கிறது. வளர்ந்து கொள்கிறது. ஆனால் மனிதர்களைப் பண்பாட்டு அடிப்படையில் வாழவைக்கின்றது என்பது இங்கு எண்ணத்தக்கது.*

*தமிழ்ப்பண்பாடு என்பது தமிழ் நிலத்திற்கான தனித்த பண்பாடு. இடம், காலம், தட்பவெப்பம் போன்றவற்றின் அடிப்படையில் சிறந்த அடையாளங்களைத் தமிழர்கள் பண்டைக்காலம் தொட்டே பெற்றும் வளர்த்தும் வந்துள்ளனர். இப்பண்பாடுகளைப் பதிவனவாக இலக்கியங்கள் இலக்கணங்கள் விளங்குகின்றது. அவற்றில் புதைந்து கிடக்கும் பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்துவதன்*

*வாழியாக இன்னும் தமிழர்தம் பண்பாட்டை மேன்மைப் படுத்த இயலும்.*

*காரைக்குடியில் வாழ்ந்த கவிஞர் ரெ. முத்துக்கணேசனார். இவர் காந்தியத் தொண்டராகவும் தொடர்ந்து எழுதி வந்த இலக்கியப் படைப்பாளியாகவும், உரையாசிரியராகவும் விளங்கியுள்ளார். இவரின் படைப்புகளில் தமிழர் பக்திப் பண்பாடு, பழக்க வழக்கம், பண்புநலன்கள் பதிவு செய்யப்பெற்றுள்ளன.*

*இவரின் படைப்புகளில் ஒன்றான மரகத் கோவை என்ற கவிதைத் தொகுப்பில் காணலாகும் பண்பாட்டுப் பதிவுகளை இக்கட்டுரை தொகுத்தும் வகுத்தும் ஆய்வு செய்தும் உரைக்கின்றது.*

*மரகதக் கோவை என்ற தொகுப்பு, பிள்ளையார் பதிப்பகம், 1. அருணாசலம் தெரு, அருணா நகர், காரைக்குடி என்ற முகவரியில் இருந்து ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொன்னூற்று ஆறாம் ஆண்டு வெளியிடப் பெற்றுள்ளது. இதில் பல்வேறு தலைப்புகளில் கவிதைகள் அமைந்துள்ளன. முதலில் அமைந்துள்ள இருபத்து மூன்று கவிதைகள் தமிழ்ச் சான்றோர்களைப் பற்றிப் பெற்றுள்ளனர். அடுத்துவரும்பதினாறுதலைப்புகளில்பொதுத் தலைப்புகளில் கவிதைகள் இயற்றப் பெற்றுள்ளன.*

## உலகப் பண்பாடு

*உலகை நோக்கிய தமிழர்தம் பண்பாடு தொடக்க கால இலக்கியங்கள் முதலே காணக் கிடைக்கின்றது. உலகு என்ற நோக்கிலேயே தமிழில் திருமுருகாற்றுப்படை, பெரியபுராணம், கம்பராமாயணம் போன்றன தொடங்குகின்றன. தமிழர்கள் உலகு தழுவிய பண்பாட்டைக் கருதியவர்கள் என்பது இதன் வழி தெரிகிறது.*

*ரெ. முத்துக்கணேசனாரும் உலகு தழுவி அமைய வேண்டிய பண்பாட்டு அடிப்படைகளைத் தம் கவிதைகளில் பதிந்துள்ளார்.*

## ஆன்மீகப் பண்பாடு

*ஒன்றே கடவுள் என்ற பண்பாடு தமிழர்தம் ஆன்மீகப் பண்பாடு ஆகும். இதனை உலக அளவிலும் காண விழைகிறார் கவிஞர்.*

***தெய்வம் பல இல்லை, தேவன் ஒருவனென***
***ஐயமற வேதம் அரற்றியுமே - உய்ய***
***பலவடிவம் கண்டு பரவிடுவார் என்னே***
***உகலம் தழுவும் உணர்வு***[3]

*என்று உலகம் ஒன்று கடவுள் ஒன்று என்ற கொள்கை உலகில் வரவேண்டும் என்று விழைகிறார் கவிஞர்.*

## மனித நேயப் பண்பாடு

*உலக மனிதர்கள் அனைவரும் போரின்றி கருணை, அறம், சகோதரத்துவம் ஆகியவற்றுடன் திகழ வேண்டும் என்று கவிஞர் விரும்புகிறார்.*

***ஓரறிவு பெற்ற உயிரினமாம் மண்புழுக்கள்***
***ஊரில் நிலத்திற்கு உதவிடுமே தேரில்***
***இலங்கு மனிதர்பால் இல்லைகாண்! அந்தோ***
***உலகம் தழுவும் உணர்வு***[4]

*என்று உலகம் முழுவதும் உதவும் மனப்பாங்கு பெருகுதல் வேண்டும் என்று மண்புழுவைக் காட்டி ஓரறிவு உயிரினத்தின் தன்மையைக் காட்டி ஆறறிவு உலக மக்களுக்கு அறிவுறுத்துகிறார் கவிஞர்.*

## பல குழுக்கள் இணைந்த பண்பாடு

*உலகம் என்பது பல நாடுகள் இணைந்து பண்பாட்டுச் சூழல் உடையதாகும். பல குழுக்கள் இணைந்த பண்பாடு என்பது இக்கவிஞரைப் பொறுத்த அளவில் தமிழ்நாடு சார்ந்த பண்பாடாகும். இதனையும் கவிஞர் பதிவு செய்துள்ளார். தமிழர்களின் பொங்கல் விழாவைக் கவிஞர்*

***“சுமங்கலப் பானையொடு மாவிலைத் தோரணம்***
***சங்கொலி தானெழத் தழைத்த தைப் பொங்கலே***
***மஞ்சள் கிழங்குபோல் மாநிலம் வளமுற***
***அஞ்சனம் அகன்றிட அருளு நற்பொங்கலே!”***[5]

*என்று பாடுகிறார். இப்பாடலடிகளில் பொங்கல் விழாவைத் தமிழர்கள் கொண்டாடும் முறைமை பதிவு செய்யப்பெற்றுள்ளது. புதுப்பானையில் புத்தரிசிப் பொங்கல்*

*வைப்பதும், மாவிலைத் தோரணம் கட்டுவதும், மங்கலச் சங்கு ஊதுவதும், மஞ்சள் கிழங்கு பயன்படுத்துவதும் பதிவு செய்யப்பெற்றுள்ளன. தைப் பொங்கல் என்று பொங்கல் கொண்டாடும் திங்களும் குறிக்கப் பெற்றுள்ளது.*

*தொடர்ந்து தமிழ்மக்களின் தன்னடக்கம் குறித்தும் ரெ. முத்துக்கணேசனார் தம் கவிதையில் பதிவு செய்துள்ளார்.*

***பாவிற்குள் அடங்கிடுமே பொருள டக்கம்***
***பார்வைக்குள் அடங்கிடுமே பண்படக்கம்***
***பூவிற்குள் முகிழ்த்திடுமே மணவடக்கம்***
***பொறுமைக்குள் வளர்ந்திடுமே புகழடக்கம்***
***காவிற்குள் பூத்திடுமே அழகடக்கம்***
***கசிமனத்தே ஒளிர்ந்திடுமே அருளடக்கம்***
***நாவிற்குள் அடங்கிடுமே புலனடக்கம்***
***நாவாரப் போற்றுவமே நாவடக்கம்!***

*என்று பல்வகை அடக்கங்களைத் தமிழர்கள் கைக்கொள்ளும் நிலையைக் கவிஞர் பாடுகிறார். பண்படக்கம், அருள் அடக்கம், புலன்அடக்கம், நாஅடக்கம் என்று தமிழர்களின் பல்வகை அடக்க மேன்மைகளைப் பதிவு செய்கிறார் கவிஞர்.*

### தம் குழு சார்ந்த பண்பாடு

*கவிஞர் ஒரு சிறு குழுவான சமுதாயம் சார்ந்தவர். நகரத்தார்கள் எனப்படும் குழுவினர் சார்ந்தவர். அக்குழு சார்ந்த பண்பாடுகளும் ஓரளவிற்கு இவர் தம் கவிதைகளில் அமைந்துள்ளன. கவிஞர்கள் குழு சார்ந்த, சமுதாயம் சார்ந்த, உலகம் சார்ந்த பண்பாடுகளைப் பதிவு செய்பவர் என்பதற்கு ரெ. முத்துக்கணேசனாரே சான்றாகிறார்.*

***"நெய்யினைச் சேர்த்த பண்டம் நெடிது நாள் இருப்ப தேபோல்***
***தையலைப் போற்றும் நாடு தகுதியில் சிறப்பதே போல்***
***செய்யவாம் எளிமை சேரந்தால் சீர்த்திகள் நிலைத்து வாழும்***
***பையவே அடக்கத் தோடு பண்பெலாம் கூடும் அம்மா"***

*என்று தாம் வாழும் செட்டிநாட்டுப் பகுதிக்கான பண்பாட்டுப் பதிவுகளைப் பதிவு செய்கிறார் ரெ. முத்துக்கணேசனார். நகரத்தார்கள் வாழும் செட்டிநாட்டுப் பகுதி பலகாரங்கள், உணவு வகைகள் போன்றனவற்றைச் செய்வதில் தனித்துவம் வாய்ந்தவை. நெய்யில் செய்த பண்டம் நெடிது நாள் கெடாமல் இருக்கும் என்பதால் கெடாமல் இருக்கும் திண்பண்டங்களை நெய்யில் நகரத்தார்கள் செய்கின்றனர். இக்குறிப்பினைக் கவிஞர் எடுத்தாண்டுள்ளார். மேலும் பையவே என்பது இப்பகுதியில் குறிப்பாக மதுரைப் பகுதியில் வழங்கும் வழக்குச் சொல் ஆகும். பையவே சென்று பாண்டியர்க்கு ஆகுக என்று சம்பந்தர் தேவாரத்தில் குறிப்பது போல இக்கவிஞர்ம் பையவே அடக்கத்தோடு வாழ்ந்தால் பண்பெலாம் கூடும் என்கிறார். எனவே பொருள் அளவிலும் சொல் அளவிலும் கவிஞர்கள் பண்பாட்டுப் பதிவுகளைத் தம் கவிதைகளில் இயல்பாகப் பதிவு செய்கின்றனர் என்பதை உணர முடிகின்றது.*

### முடிவுகள்

*கவிஞர் ரெ. முத்துக்கணேசனார் காரைக்குடியில் வாழ்ந்த கவிஞர் ஆவார். இவர் பற்பல மரபுக் கவிதைகளைப் படைத்தளித்துள்ளார். இவற்றில் ஒன்று இவர் படைத்த மரகதக் கோவை என்பதாகும். இதனுள் பல்வேறு தலைப்புகளில் கவிதைகள் எழுதப்பெற்றுத் தொகுக்கப்பெற்றுள்ளன. இத்தொகுப்பில் உள்ள கவிதைகளில் உலகப் பண்பாடு பற்றியும், சமுதாயப் பண்பாடு பற்றியும், குழுப்பண்பாட்டு நிலையிலும் கவிஞர் பல்வேறு பண்பாட்டுக் கருத்துகளைப் பதிவு செய்துள்ளார்.*

*ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற நன் முறைமை உலகம் முழுவதும் வரவேண்டும். உலக மக்கள் அனைவரும் பகை எதிர்ப்பு உணர்வு இன்றி அமைதியாக உதவி செய்து சகோதரத்துவத்துடன் வாழ வேண்டும். இந்நிலைகளில் அவர் உலகப் பண்பாடு குறித்த செய்திகளைப் பகிர்ந்துள்ளார். தமிழர் தம் பண்பாட்டு விழாவான தைப்பொங்கலைக்*

கொண்டாடும் முறைமையைக் கவிஞர் பதிவு செய்துள்ளார். தமிழர்களின் அடக்கம் நிறைந்த பண்பாட்டுக் குணங்களையும் கவிஞர் தம் கவிதைகளில் பதிவுசெய்துள்ளார். தம் குழு சார்ந்த நகரத்தார் இனப் பண்பாட்டு அடையாளங்களையும் கவிஞர் தம் கவிதைகளுக்குள் காட்டியுள்ளார். கவிஞர்கள் தம் கவிதைப் படைப்புகள் பண்பாட்டுக் கருவூலங்கள் என்பதை இதன் வழி அறிந்து கொள்ளமுடிகின்றது.

**சான்றாதாரங்கள்**

1. மேற்கோள், க. த. திருநாவுக்கரசு, தமிழ்ப் பண்பாடு, ப. 1.
2. மேலது.
3. ரெ. முத்துக்கணேசன், மரகதக் கோவை, ப. 56.
4. மேலது.
5. ரெ.முத்துக்கணேசன், மரகதக் கோவை, ப. 64.
6. ரெ. முத்துக்கணேசன், மரகதக் கோவை, ப. 54.

**துணைநூற்பட்டியல்**


1. திருநாவுக்கரசு.க.த., தமிழ்ப்பண்பாடு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 2001 மறுபதிப்பு.
2. முத்துக்கணேசன். ரெ., மரகதக்கோவை, பிள்ளையார் பதிப்பகம், காரைக்குடி, 1996.